1992 செப்டம்பர் 22]

பதிக்கவும் வேலைகள் 29–4–1992 துவக்கப்பட்டு, 29–7–1992 -ல் முடிக்கப்பட்டது. பின்னர் தரச் சோதனையும் பரிசோதிக்கப்பட்டது. 24—8—1992 அன்று ஒப்படைக்கப்பட்டு, 24—8—1992 முதல் திருத்தங்கல் பேரூராட்சிக்கு தினமும் 2.20 லட்சம் லிட்டர் குடிநீர் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 34, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

34—

சைதாப்பேட்டை மடுவங்கரை பகுதி மக்களுக்கு பாலாற்றுத் தண்ணீர்.

*10060— திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சைதாப்பேட்டை மடுவங்கரை பகுதி மக்களுக்கு மேல் நிலை தண்ணீர் தொட்டி அமைத்து பாலாற்றுத் தண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மடுவங்கரையில் மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைத்து பாலாற்றுத் தண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் நகராட்சி மடுவங்கரைக்குப் பக்கத்திலே இருக்கிற காரணத்தாலும், மடுவங்கரை குறைந்தது 40 ஆயிரம் மக்கள் வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், தினந்தோறும் குறைந்தது 32 டாங்குகளுக்கு, லாரிகள் மூலமாக தண்ணீர் கொடுக்கின்ற காரணத்தாலும், தினசரி ரூ.1170 செலவு ஆகிறது. மாதக் கணக்கைப் பார்த்தால் ரூ.35,100 செலவாகிறது. வருடத்திற்கு ரூ. 4.21 இலட்சம் செலவாகிறது. 10 வருடங்களாக இதே நிலையை மேற்கொண்டிருப்பதால், வருடத்திற்கு ரூ. 4.21 இலட்சம் செலவு செய்கிற காரணத்தால், பக்கத்திலே இருக்கின்ற ஆலந்தூர் நகராட்சியிலிருந்து பாலாற்றுத் தண்ணீரை விநியோகம் செய்து கொண்டிருப்பதால், ஒரு நிலையான திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கிருஷ்ணா நதி நீர் விநியோகத் திட்டத்திற்கு 12—4—90 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும். தற்போது சென்னையில் 12 குடிநீர் வழங்கும் மண்டலங்கள் செயல்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் கூடுதலாக 4 குடிநீர் மண்டலங்கள் அமைக்கப்படும். சைதை தொகுதியில், மடுவங்கரையை உள்ளடக்கிய வேளச்சேரி மண்டலத்தை அமைப்பதற்கு நீர் வழங்குவதற்குத் தேவையான நிலத்தை ஒதுக்கித் தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். 13 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீர் தொட்டியும், 1.4 மில்லியன் லிட்டர் நீர் தேக்குகின்ற வகையில் இத்திட்டம் நிறைவேற்றப் படுகின்றபோது மடுவங்கரை மற்றும் வேளச்சேரி பகுதிகளுக்கு நீர் விநியோகம் சீர் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. என். ஜி. வேணுகோபால், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

35—

இராணிப்பேட்டையில் கூட்டுறவு சிறப்பங்காடி அமைத்தல்.

*9006 —திரு. என். ஜி. வேணுகோபால்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிப்காட் மற்றும் பி. எச்.இ.எல். (BHEL) போன்ற எண்ணற்ற தொழிற்சாலைகள் இராணிப்பேட்டையில் இருப்பதால் கூட்டுறவு சிறப்பங்காடி அமைத்து அதில் 'சுயசேவை மையத்தை (Self Service Centre) ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிறப்பங்காடிகளை நிறுவுவதற்கு மைய அரசு விதித்துள்ள நிபந்தனைகளின் அடிப்படையில், இராணிப்பேட்டையில், தற்பொழுது சிறப்பங்காடி அமைக்கவும் அதில் சுயசேவைப் பிரிவை தொடங்கவும் போதுமான சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.